## 4.2 அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – ஒரே தவணையில் நிதி விடுவித்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

கடித எண்.29437/மா அதி–2/2006–1 நாள் : 19.10.2006

**அனுப்புநர்**

திரு.க.அஷோக் வர்தன் ஷெட்டி,இ.ஆ.ப.
அரசு செயலாளர்.

**பெறுநர்**

ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி இயக்குநர், சென்னை–15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
ஆணையாளர், சென்னை மாநகராட்சி, சென்னை–3
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்ளின் திட்ட அலுவலர்கள்
கருவூலக் கணக்கு ஆணையாளர், சென்னை–35
மாநில தலைமை கணக்காயர், சென்னை–6/18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை–35
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்) சென்னை–9
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

**ஐயா,**

**பொருள் :** திட்டங்கள்–புதிய மாநில திட்டம்–அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்–அறிமுகப்படுத்துதல்–திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் –ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் வெளியிடப்படுகிறது.

**பார்வை :** அரசு ஆணை (நிலை) எண்.115, ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சித் துறை நாள் 11.9.2006

**திருத்தம்**

11.9.2006 நாளிட்ட ஊரக வளர்ச்சி (மற்றும்) ஊராட்சி துறையின் அரசாணை நிலை எண்.115–ல் பத்தி 5–க்குப் பதிலாக பின்வருமாறு வாசிக்கவும்

**5. நிதி ஒதுக்கீடு**

நமது கிராமம் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.175 கோடி, வறுமை ஒழிப்பு திட்டத்திற்கு (ultra poor) ஒதுக்கப்பட்ட ரூ.20 கோடி ஊரக குடியிருப்பு திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.50 கோடி மற்றும் தன்னிறைவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.75 கோடி ஆகியவற்றோடு ரூ. 90 கோடி கூடுதலாக சேர்த்து 2006–2007 திருத்திய வரவு செலவு திட்டத்தில் ரூ.410 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான எஞ்சிய ரூ.90 கோடி நிதியை ஊரக உள்ளாட்சி அமைப்புகளக்கு பகிர்ந்தளிக்கப்படும் தொகையில் உள்ள சமன்பாடு நிதி மற்றும் ஊக்கத் தொகை நிதிகளிலிருந்து ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு மேற்குறிப்பிட்ட மொத்தம் ரூ.500 கோடி நிதியை அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து நடப்பு ஆண்டில் பயன்படுத்த அரசு ஆணையிடுகிறது இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டியதின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட ரூ.410 கோடியை (ரூபாய் நானுற்று பத்து கோடி மட்டும்) ஒரே தவணையில் விடுவித்து அரசு ஆணையிடுகிறது.

2. இக்கடிதம் நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.300/DS(B)/2006, நாள் 19.10.2006 பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

அரசு செயலாளருக்காக